ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| வெளியிடுபவர் | பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2019.12.27 |

## நாணயக்கொள்கை மீளாய்வு: இல.8 - 2019

### இலங்கை மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்கள் மாற்றமின்றியிருக்கும்

**இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை, 2019 திசெம்பர் 26ஆம் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில், இலங்கை மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் அவற்றின் தற்போதைய மட்டங்களான முறையே 7.00 சதவீதத்திலும் 8.00 சதவீதத்திலும் தொடர்ந்தும் பேணுவதன் மூலம் அதன் தளர்த்தப்பட்ட நாணயக்கொள்கையினைத் தொடர்ந்தும் பேணுவதற்குத் தீர்மானித்தது. சபையானது, உள்நாட்டுப் பொருளாதாரம் மற்றும் நிதியியல் சந்தைகள் அதேபோன்று உலகளாவிய பொருளாதாரம் என்பனவற்றின் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படுகின்ற அபிவிருத்திகள் என்பனவற்றை மிகக் கவனமாக ஆய்வு செய்தமையினைத் தொடர்ந்து இத்தீர்மானத்திற்கு வந்துள்ளது. நாணயச்சபையின் தீர்மானமானது, பணவீக்கத்தினை 4–6 சதவீத வீச்சில் பேணுகின்ற வேளையில் பொருளாதாரம் நடுத்தர காலத்தில் அதன் உள்ளார்ந்த வளர்ச்சியை அடைவதற்கு உதவும் நோக்குடன் இசைந்து செல்வதாகக் காணப்படுகிறது.**

**முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்களில் நாணயக்கொள்கையினைத் தளர்த்துகின்ற வேகமானது மெதுவடைவது போல் தோன்றுகிறது**

பொதுவான பொருளாதார மெதுவடைவு மற்றும் குறைவடைந்த பணவீக்க எதிர்பார்ப்புக்கள் என்பனவற்றின் காரணமாக நாணயத் தளர்த்தல் பாதையினைப் பின்பற்றிய பெரும்பாலான முன்னேற்றங்கண்ட பொருளாதாரங்கள் மேலதிக நாணயத் தளர்த்தல்களை இடைநிறுத்துவது போல் தெரிகிறது. எனினும், தோற்றம்பெற்றுவரும் சந்தையின் பெரும்பாலான கொள்கை வகுப்பாளர்கள், அவர்களது பொருளாதாரங்களின் நடவடிக்கைகளைத் தூண்டும் பொருட்டு எதிர்வரும் காலத்திலும் நாணயக்கொள்கைத் தளர்த்தல்களைப் பேணவேண்டுமென விரும்புகின்றனர்.

**உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகள் படிப்படியாக மீட்சியடைந்து வருகின்றன**

தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட தற்காலிக மதிப்பீடுகளின்படி, இலங்கைப் பொருளாதாரம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் காணப்பட்ட 1.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியைத் தொடர்ந்து 2019இன் மூன்றாம் காலாண்டில் 2.7 சதவீதம் கொண்ட மெதுவான வேகத்தில் வளர்ச்சி கண்டது. வேளாண்மை தொடர்பான நடவடிக்கைகள் 0.4 சதவீதத்தினால் சிறிதளவில் வளர்ச்சியடைந்த வேளையில், பணிகள் மற்றும் கைத்தொழிலுடன் தொடர்பான நடவடிக்கைகள் முறையே 2.8 சதவீதத்தினாலும் 3.3 சதவீதத்தினாலும் விரிவடைந்தன. முன்னோக்கிப் பார்க்கையில், மேம்பட்ட அரசியல் உறுதிப்பாடு மற்றும் பொருளாதாரத்தினைத் தூண்டுவதற்கான குறுங்கால வழிமுறைகள் என்பனவற்றின் உதவியுடன் பொருளாதார நடவடிக்கை உறுதியான விதத்தில் மீளெழுச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வுத்வேகமானது நடுத்தர மற்றும் நீண்ட காலத்திற்கான பொருத்தமான அமைப்பியல் சீர்திருத்தங்களின் அறிமுகப்படுத்தலினூடாக நிலைப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**அண்மைய காலத்தில் பணவீக்கம் தாழ்ந்த ஒற்றை இலக்க மட்டத்தில் தொடர்ந்துமிருக்கும் என்பதுடன் அது நடுத்தர காலத்தில் 4-6 வீச்சிற்குள் நிலைப்படுத்தப்படும்**

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் இரண்டிலும் ஏற்படுகின்ற ஆண்டிற்கு ஆண்டு மாற்றங்களினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கமானது 2019 நவெம்பரில் குறைவடைந்தமைக்கு உணவுப் பணவீக்கத்தில் காணப்பட்ட மெதுவான போக்கே தூண்டுதலாக அமைந்தது. வரிகளின் கீழ் நோக்கிய திருத்தங்கள் மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட நிருவாக ரீதியாகத் தீர்மானிக்கப்பட்ட விலைகளில் செய்யப்பட்ட குறைப்பு என்பனவற்றின் முக்கிய தாக்கம் காரணமாக எதிர்வரும் காலத்தில் பணவீக்கம் மேலும் மெதுவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருந்தபோதிலும், காலநிலையால் பாதிக்கப்படுகின்ற உணவு விலைகளின் அசைவுகள் அண்மைய காலத்தில் அதிகரித்த பணவீக்கத்தினைத் தோற்றுவிக்கலாம். எதிர்மறையான வெளியீட்டு இடைவெளி படிப்படியாகக் குறைவடைந்து வருகின்றமை அதேபோன்று நன்கு கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்ற பணவீக்க எதிர்பார்க்கைகள் என்பனவற்றின் காரணமாக நடுத்தர காலப்பகுதியில் பணவீக்கம் 4-6 சதவீத வீச்சில் தொடர்ந்தும் காணப்படுமென எறிவுகள் எடுத்துக்காட்டுகின்றன.

**சவால்மிக்க பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் ஒப்பீட்டு ரீதியில் உறுதியான வெளிநாட்டுத் துறை**

இறக்குமதிகள் குறிப்பிடத்தக்களவிற்குச் சுருக்கமடைந்து வருகின்றமை, வணிகப்பொருள் ஏற்றுமதிகள் மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளமை என்பன வர்த்தகக் கணக்கின் பற்றாக்குறையின் ஒன்றுசேர்ந்த சுருக்கத்திற்கு வழிவகுத்தமையின் காரணமாக 2019இன் முதல் பத்து மாத காலப்பகுதியில் வர்த்தகத் துறையின் செயலாற்றம் தொடர்ந்தும் முன்னேற்றம் கண்டது. தற்காலிகத் தரவுகள் 2019இன் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை 2018இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், குறிப்பிடத்தக்களவிற்குக் குறைவாக இருக்குமென்பதனை எடுத்துக்காட்டுகின்றன. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலைத் தொடர்ந்து பின்னடைவினைக் கொண்டிருந்த சுற்றுலாத் துறை எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திலும் பார்க்க விரைந்த வேகத்தில் மீட்சியைப் பதிவுசெய்தன. தொழிலாளர் பணவனுப்பல்கள் ஓரளவு குறைவாக இருந்த வேளையில் அரச பிணையங்கள் சந்தை மற்றும் பங்குரிமை மூலதனச் சந்தைகளிலிருந்து வெளிநாட்டு முதலீடுகளில் வெளிப்பாய்ச்சல்கள் அவதானிக்கப்பட்டன. இருப்பினுங்கூட, ஆண்டு முழுவதிலும் பதிவுசெய்யப்பட்ட கலப்பான அசைவுகளின் காரணமாக 2019இன் இதுவரையான காலப்பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக 0.7 சதவீதத்தினால் உயர்வடைந்தது.

அதேவேளை, 2019 நவெம்பர் இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் ஐ.அ.டொலர் 7.5 பில்லியனாக அமைந்து 4.5 மாதங்களுக்கான இறக்குமதிகளுக்குப் போதுமானதாகக் காணப்பட்டன.

**நாணய மற்றும் கொடுகடன் கூட்டுக்களின் வளர்ச்சி 2020இல் விரைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது**

2019 ஓகத்திலிருந்து ஆரம்பமான நான்கு மாத காலப்பகுதியில், உண்மையான நியதிகளில் தனியார் துறைக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட கொடுகடன் உறுதியாக விரிவடைந்த போதும், தனியார் துறைக் கொடுகடனின் ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி, ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. தாழ்ந்த கொடுகடன் விரிவாக்கத்தின் காரணமாக விரிந்த பணத்தின் ($M_{2b}$) ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியும் தொடர்ந்தும் மிதமாகக் காணப்பட்டது. முன்னோக்கிப் பார்க்கையில், கடன்வழங்கல் வீதங்களின் தொடர்ச்சியான வீழ்ச்சியின் எதிர்பார்க்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கையினை மீளெழுச்சிப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுவரும் ஏனைய பொறிமுறைகள் என்பவற்றுடன் பணம் மற்றும் கொடுகடன் கூட்டுக்கள் படிப்படியாக மீட்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வருகின்ற சந்தைக் கடன் வழங்கல் வீதங்கள் மேலும் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது**

மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட நாணய மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளுக்குப் பதிலிறுத்தும் விதத்தில் சந்தைக் கடன்வழங்கல் வீதங்கள் தொடர்ந்தும் கீழ் நோக்கிச் சீராக்கப்பட்டு வருகின்றன. எனினும், இதுவரை அவதானிக்கப்பட்ட குறைப்பு எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்கக் குறைவானதாக இருந்ததுடன் நிதியியல் நிறுவனங்கள் கடன்வழங்கல் வீதங்களில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களை எதிர்வரும் காலங்களில் பூர்த்தி செய்ய வேண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றன.

**கொள்கை வட்டி வீதங்கள் தற்போதைய மட்டங்களில் பேணப்படும்**

மேலே எடுத்துக்காட்டப்பட்ட தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படும் பேரண்டப் பொருளாதார அபிவிருத்திகளைப் பரிசீலனையில் கொண்ட நாணயச்சபை 2019 திசெம்பர் 26ஆம் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் தளர்த்தப்பட்ட தற்போதைய நாணயக்கொள்கை நிலை பொருத்தமானது எனவும் கொள்கை வீதங்களில் மேலும் சீராக்கங்களை மேற்கொள்ளாமல் சந்தைக் கடன்வழங்கல் வீதங்களைக் குறைப்பதற்குப் போதுமான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன என்ற கருத்தினைக் கொண்டிருந்தது. நாணயச்சபை, ஏற்கனவே அறிவிக்கப்பட்ட வரி நிவாரணங்களும் அதேபோன்று சிறிய நடுத்தர தொழில்முயற்சித் துறைக்கான வங்கிக் கடன்களின் மூலதன மீள்கொடுப்பனவுகள் மீதான உத்தேச சட்ட இசைவுத்தாமதமும் பொருளாதாரத்திற்கு மேலதிகத் தூண்டுதலை வழங்குமென அவதானித்துள்ளது. மேலும், மேதகு சனாதிபதி அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையினை 2020 சனவரி 3ஆம் திகதி அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறதுடன் இது, பரந்த பொருளாதாரக் கொள்கைக் கட்டமைப்பிற்கும் அதேபோன்று நடுத்தர காலப்பகுதிக்கான இறைக்கொள்கை நெறிப்படுத்தல்களுக்கும் மேலதிகத் தெளிவினை வழங்கும். இப்பின்னணியில், நாணயச்சபை மத்திய வங்கியின் துணைநில் வைப்பு வசதி வீதத்தினையும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்தினையும் அவற்றின் தற்போதைய மட்டங்களான முறையே 7.00 சதவீதத்திலும் 8.00 சதவீதத்திலும் பேணுவதற்குத் தீர்மானித்துள்ளது.

| | |
|---|---|
| **நாணயக்கொள்கைத் தீர்மானம்:** | **கொள்கை வீதங்கள் மற்றும் நியதி ஒதுக்கு விகிதம் என்பன மாற்றமடையவில்லை** |

| | |
|---|---|
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 7.00% |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 8.00% |
| நியதி ஒதுக்கு விகிதம் | 5.00% |

**தகவல் குறிப்பு:**

பத்திரிகை மாநாடு, ஆளுநர் பேராசிரியர் டபிள்யு டி லக்ஷ்மன் அவர்களுடன் 2019 திசெம்பர் 27ஆம் திகதி இன்று மு.ப. 10.30 மணிக்கு இலங்கை மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

நாணயக்கொள்கை மீதான அடுத்த கிரமமான அறிக்கை 2020 சனவரி 30ஆம் நாள் வெளியிடப்படும்.

**தரவு இணைப்புக்கள்:**

## அட்டவணை 01: உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (தற்காலிகமானவை)

| பொருளாதார நடவடிக்கைகள் | ஆண்டிற்கு ஆண்டு % மாற்றம் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2017 | | 2018 | | | | | 2019 | | |
| | முதலாம் காலாண்டு | வருடாந்தம் | முதலாம் காலாண்டு | இரண்டாம் காலாண்டு | மூன்றாம் காலாண்டு | நான்காம் காலாண்டு | வருடாந்தம் | முதலாம் காலாண்டு | இரண்டாம் காலாண்டு | மூன்றாம் காலாண்டு |
| **வேளாண்மை** | -2.0 | **-0.4** | 5.1 | 5.6 | 4.0 | 4.5 | **4.8** | 5.6 | 0.7 | 0.4 |
| **கைத்தொழில்கள்** | 4.7 | **4.1** | 1.7 | 2.8 | 3.1 | -3.6 | **0.9** | 2.9 | 1.3 | 3.3 |
| **பணிகள்** | 2.8 | **3.6** | 5.5 | 4.8 | 4.3 | 4.3 | **4.7** | 4.1 | 1.6 | 2.8 |
| **மொ.உ.உற்பத்தி** | **3.2** | **3.4** | **4.0** | **3.9** | **3.5** | **1.8** | **3.2** | **3.7** | **1.5** | **2.7** |

*மூலம்:* தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

## அட்டவணை 02: பணவீக்கம்

| மாதம் | | திசெ 18 | மாச்சு 19 | யூன் 19 | யூலை 19 | ஓகத் 19 | செத் 19 | ஒத் 19 | நவெ 19 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **முதன்மைப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்)** | கொநுவிசு(2013=100) | 2.8 | 4.3 | 3.8 | 3.3 | 3.4 | 5.0 | 5.4 | 4.4 |
| | தேநுவிசு(2013=100) | 0.4 | 2.9 | 2.1 | 2.2 | 3.4 | 5.0 | 5.6 | 4.1 |
| **மையப் பணவீக்கம் (ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம்)** | கொநுவிசு(2013=100) | 3.1 | 5.6 | 5.8 | 5.7 | 5.6 | 5.6 | 5.5 | 5.1 |
| | தேநுவிசு(2013=100) | 3.1 | 5.8 | 6.1 | 6.1 | 5.9 | 5.6 | 5.6 | 5.5 |

மூலம்: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம்

## அட்டவணை 03: நாணயத் துறை அபிவிருத்திகள் (தற்காலிகமானவை)

| குறிகாட்டி | வெளிநின்ற தொகை (ரூ.பில்லியன்) | | | | | ஆண்டுக்கு ஆண்டு % மாற்றம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | யூலை 19 | ஓகத் 19 | செத் 19 | ஒத் 19 | நவெ 19 | யூலை 19 | ஓகத் 19 | செத் 19 | ஒத் 19 | நவெ 19 |
| ஒதுக்குப் பணம் | 888 | 913 | 915 | 908 | 919 | -11.3 | -9.1 | -9.5 | -9.0 | -2.4 |
| விரிந்த பணம் ($M_{2b}$) | 7,355 | 7,397 | 7,443 | 7,456 | 7,473 | 8.2 | 7.7 | 7.4 | 6.7 | 6.1 |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | 105 | 102 | 113 | 102 | 83 | -39.0 | -39.0 | 1,374.4 | 698.7 | 292.9 |
| தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் | 7,251 | 7,295 | 7,331 | 7,355 | 7,390 | 9.5 | 8.9 | 5.8 | 5.0 | 4.3 |
| அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் | 2,704 | 2,752 | 2,732 | 2,729 | 2,702 | 21.4 | 21.1 | 12.5 | 12.6 | 9.6 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன் | 729 | 747 | 755 | 789 | 803 | 14.6 | 16.8 | 15.1 | 12.5 | 12.2 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | 5,604 | 5,626 | 5,680 | 5,706 | 5,753 | 7.7 | 7.2 | 6.1 | 5.1 | 4.4 |
| விரிந்த பணம் ($M_4$) | 9,082 | 9,133 | 9,211 | 9,244 | 9,267 | 9.0 | 8.7 | 8.3 | 8.1 | 7.6 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 04: வட்டி வீதங்கள்

| வட்டி வீதம் (%) | யூன் 19 முடிவில் | யூலை 19 முடிவில் | ஓகத் 19 முடிவில் | செத் 19 முடிவில் | ஒத் 19 முடிவில் | நவெ 19 முடிவில் | 2019 திசெ 26 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|---|---|
| **மத்திய வங்கியின் கொள்கை வீதங்கள்** | | | | | | | |
| துணைநில் வைப்பு வசதி வீதம் | 7.50 | 7.50 | 7.00 | 7.00 | 7.00 | 7.00 | 7.00 |
| துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம் | 8.50 | 8.50 | 8.00 | 8.00 | 8.00 | 8.00 | 8.00 |
| **நிறையேற்றப்பட்ட சராசரி அழைப்புப் பணவீதம்** | 7.86 | 7.70 | 7.43 | 7.45 | 7.45 | 7.48 | 7.50 |
| **திறைசேரி உண்டியல் விளைவுகள் (முதலாந்தரச் சந்தை)** | | | | | | | |
| 91-நாள் | 8.24 | 7.85 | 7.63 | 7.62 | 7.49 | 7.45 | 7.51 |
| 182-நாள் | 8.49 | 7.94 | 7.70 | 7.75 | 7.65 | 7.67 | 8.02 |
| 364-நாள் | 8.70 | 8.21 | 8.22 | 8.41 | 8.35 | 8.29 | 8.45 |
| **கடன்வழங்கல் வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதம் (வராந்தம்) | 11.52 | 10.89 | 10.66 | 10.49 | 10.44 | 10.15 | 10.04 |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன்வழங்கல் வீதம் | 14.36 | 14.22 | 14.04 | 13.91 | 13.71 | 13.65 | - |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் | 14.43 | 13.91 | 13.84 | 13.50 | 13.19 | 12.87 | - |
| **வைப்பு வீதங்கள்** | | | | | | | |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 8.94 | 8.88 | 8.73 | 8.51 | 8.37 | 8.27 | 8.20 |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 11.07 | 10.97 | 10.74 | 10.46 | 10.27 | 10.14 | 10.05 |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 9.85 | 8.58 | 8.40 | 8.41 | 8.66 | 8.78 | - |

மூலம்: இலங்கை மத்திய வங்கி